**06.10.2020 மாலை பிற்பகல் 2.00 மணிக்கு கலைப்பீடாதிபதி 2018/2019 முதலாம் வருட மாணவர்களுடன் இணைய வழிமூலம் கலந்துரையாடியதன் சாராம்சம் வருமாறு.**

அனைவருக்கும் வணக்கம்

வேலைப்பளு காரணமாக உங்களுடைய வழிகாட்டுதல் வகுப்புகளின் போது என்னால் நேரடியாக உங்களுடன் தொடர்பு கொள்ள முடியவில்லை நீங்கள் அனைவரும் நாங்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க பாடத் தெரிவுகளை மேற்கொண்டுள்ளீர்கள். தரப்பட்ட பாடத்தெரிவினைப் பார்க்கும் போது சில பாடங்களுக்கு மாத்திரம் குறிப்பாக

| Subject | Student No |
|---|---|
| Geography | 143 |
| History | 127 |
| Political Science | 166 |
| Psychology | 245 |
| Sociology | 174 |
| Tamil | 132 |

பாடங்களுக்கு மட்டும் 100 ற்கு மேற்பட்ட மாணவர்கள் விண்ணப்பித்து இருக்கிறீர்கள்.

கலைப்பீடத்தில் உள்ள மனித வளங்கள் மற்றும் பௌதீக வளங்கள் ஆகியவற்றை கருத்தில் எடுத்து நோக்கும் போது 100 ற்கு மேற்பட்ட மாணவர்களை ஒரே பாட நெறியில் அனுமதிப்பது பொருத்தமற்றது. தற்போதைய பாடத்திட்டத்தின்படி உங்கள் கற்கை நெறியானது மாணவரை மையப்படுத்திய கல்வி முறையில் அமைந்துள்ளதால் ஆகக்கூடிய தொகையினரை கல்விச் சுற்றுலாவில் ஈடுபடுத்துவதோ குழு நிலை செயற்பாட்டில் ஈடுபடுத்துவதோ மிகுந்த சிரமத்தை உண்டாக்கும் என்பதுடன் சரியான கல்விசார் வழிகாட்டலை விரிவுரையாளர்களால் வழங்குவது கடினம் எனவே நீங்கள் இவ் விடயத்தில் மிகவும் சிந்தித்து தகுந்த முடிவினை எடுக்க வேண்டும். 12.10.2020 முதல் உங்களுக்கான இணையவழிக் கற்பித்தல் ஆரம்பமாகும். எனவே உங்களுக்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பம் இணையவழி கற்பித்தல் ஆரம்பித்து மூன்று கிழமைகளின் பின்னர் பாடங்களை மாற்றுவதற்கு அனுமதி வழங்கப்படும். எனவே அச் சமயத்தில் நீங்கள் விரும்பின் பாடங்களை மாற்றிக் கொள்ளலாம். பாடங்களும் அவற்றை தற்போது தெரிவு செய்த மாணவர்களின் எண்ணிக்கையும் பின்வருமாறு.

| Subject | Student No |
|---|---|
| Anthropology | 47 |
| Archaeology | 63 |
| Christian Civilization | 28 |
| Cultural tourism | 79 |
| Drama & Theatre | 20 |
| Economics | 33 |
| English Literature | 11 |
| English Language Teaching | 39 |
| Fine Arts | 24 |

| | |
|---|---|
| Hindu Civilization | 64 |
| Hindu Philosophy | 23 |
| Home Economics | 27 |
| ICT | 44 |
| Linguistics | 25 |
| Media Studies | 87 |
| Philosophy | 23 |
| Planning | 53 |
| Sanskrit | 3 |
| Translation Studies | 34 |

குறிப்பாக ஒவ்வொரு பாடத்திற்கும் ஆகக் கூடுதலாக 100 மாணவர்களை மட்டுமே அனுமதிக்க முடியும்.

எனவே பின்வரும் அறிவுறுத்தல்களைக் கவனத்தில் எடுத்து செயலாற்றுங்கள்.

1) மொழி பெயர்ப்புக் கற்கை நெறிக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் எக் காரணம் கொண்டும் பாடங்களை மாற்ற முடியாது.

2) கலைப்பட்டப் படிப்புக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் மொழி பெயர்ப்பு கற்கை நெறி பாடங்களை கற்க முடியாது.

3) விசேட அனுமதியின் கீழ் பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்கள் அனுமதி கிடைக்கப்பெற்ற பாடத்தை மூன்று அல்லது நான்கு வருடங்கள் கட்டாயம் கற்க வேண்டும்.

4) IMFORMATION COMMUNICATION TECHNOLOGY (ICT) , ENGLISH LANGUAGE TEACHING(ELT) ஆகிய பாடநெறிகள் 3 வருடங்கள் மாத்திரமே கற்க முடியும். அதாவது சிறப்புக் கற்கை நெறிக்கு மாணவர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

5) கட்டாயம் தெரிவு செய்யும் பாடத்தில் ஒரு பாடம் க.பொ.த.உயர்தரத்தில் பயின்ற பாடமாக இருக்க வேண்டும்.

6) ஏற்கனவே க.பொ.த.உயர்தரத்தில் பயின்ற பாடத்திற்கு சமனான பாடநெறி பல்கலைக்கழகத்தில் எது என்பதை ஏற்கனவே இணையத்தளம் வாயிலாக அறியத் தந்திருக்கிறோம். எனவே அதனை அவதானித்து நீங்கள் பாடத்தெரிவை மாற்றலாம்.

7) மாணவர்கள் கீழ்க்காணும் தொகுதிகளில் ஏதாவது மூன்று தொகுதிகளிலிருந்து ஒரு பாடம் வீதம் தெரிவு செய்யலாம்.

    a. தொகுதி -I SOCIOLOGY , HISTORY , PHILOSOPHY , SANSKRIT
    b. தொகுதி -II POLITICAL SCIENCE , TAMIL , ENGLISH LITERATURE
    c. தொகுதி -III PSYCHOLOGY , ENGLISH LANGUAGE , ANTHROPOLOGY
    d. தொகுதி -IV ARCHAEOLOGY , ECONOMICS , HOME ECONOMICS
    e. தொகுதி -V MEDIA STUDIES , HINDU CIVILIZATION
    f. தொகுதி-VI PLANNING ,LINGUISTICS ,HINDU PHILOSOPHY,CULTURAL TOURISM,ICT
    g. தொகுதி -VII GEOGRAPHY , CHRISTIAN CIVILIZATION , DRAMA & THEATRE ARTS
    h. தொகுதி-VIII FINE ARTS

8) கற்கை நெறி தெரிவு செய்வதற்கான விண்ணப்பப்படிவம் (Google form) தரப்பட்டுள்ளது. அதனை பூர்த்தி செய்து Submit என்ற Icon ஐ அழுத்தவும். விண்ணப்ப முடிவு திகதி 31.10.2020 ஆகும்.